# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# ரூத்: ஒரு அன்பின் கதை

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest
Alastair Paterson

தழுவியவர்: Lyn Doerksen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

ஒரு வேளை நீங்கள் உங்களுடைய தாத்தா, பாட்டியினுடைய பெற்றோர்கள், அவர்களுடைய பெற்றோர்கள், மற்றும் உங்களுடைய வீட்டில் உங்களுக்கு முன்னால் வந்தவர்களை சந்திக்க, நேரிட்டால், அவர்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தார்களென்று அறிந்து மிகவும் ஆச்சரியப்படுவீர்கள், வேதாகமத்தில், இயேசுவின் முன்னோர் ஒருவரின் பெயர் ரூத். அவள் ஒரு மோவாபிய தேசத்தவளும், விக்கிரகங்களை வணங்குகிறவளுமாயிருந்தாள்.



தேவனுடைய ஜனங்கள் அவருக்கு கீழ்ப்படியாமலும், விசுவாசியாத நேரத்தில், சிம்சோன் நாட்களுக்குப்பின், ரூத்தின் கதை இஸ்ரவேலில் ஆரம்பமாகிறது. தேசத்திலே ஒரு பெரிய பஞ்சம் உண்டாயிற்று. பஞ்சம் என்றால் உங்களுக்கு என்ன என்று தெரியுமா? அது சரிதான்! பஞ்சம் என்றால் பழங்களும், பயிர்களும் வளருவதில்லை, மற்றும் பிராணிகள், சில நேரங்களில் மனிதர்களும் பசியினால் இறந்து போவார்கள்.





எலிமெலேக்கு என்ற ஒரு மனிதன், பெத்லெகேமை விட்டு தன்னுடைய மனைவி மற்றும் இரண்டு குமாரர்களுடன், ஆகாரம் தேடி, மோவாபிற்கு சென்றான்.  இந்த தேசத்திலே ஜனங்கள் விக்கிரகங்களை வழிபட்டு வந்தார்கள்.



எலிமெலேக்குக்கும், அவனுடைய
குடும்பத்துக்கும் மோவாபிலே காரியங்கள்
நன்றாக போகவில்லை, அவன்
இறந்தான்,
பின்பு
அவன்




இரண்டு
குமாரரும்
இறந்தார்கள் அவனுடைய மனைவி, நகோமி,
மற்றும் அவளுடைய இரண்டு மருமகள்களான
ரூத், ஓர்பாள் மீதியாயிருந்தார்கள். அவர்கள்
இரண்டு பேரும் மோவாபை சேர்ந்தவர்கள்.

விதவையான நகோமி, தேவன் தன்னுடைய ஜனங்களை சந்தித்தார் என்றும், அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்றும் கேள்விப்பட்டாள்.



தன்னுடைய சொந்ததேசத்திற்கு திரும்பிச் செல்ல தீர்மானம் பண்ணினாள். ஆனால் இந்த இரண்டு பெண்களும் என்ன செய்வார்கள்? நகோமி அவர்களைப் பார்த்து மோவாபிலே தங்கி மறுமணம் செய்துகொள்ளுங்கள் என்றாள்.

ஓர்பாள் தன்னுடைய குடுப்பத்திற்கு திரும்பிச்சென்றாள்.  ஆனால் ரூத்தோ மறுத்தாள். மாறாக ரூத் ஒரு அழகான கவிதையைச்சொல்லி தன்னுடைய மாமியாரைவிட்டு பிரிந்து போவதில்லை என்று வாக்குத்தத்தம் பண்ணினாள்.



நகோமியின் பழைய சிநேகிதர்கள் அவள் திரும்ப பெத்லெகேமுக்கு திரும்பினாள் என்று சந்தோஷப்பட்டார்கள். அவள் அவர்களை நோக்கி என்னை நகோமி (மகிழ்ச்சி) என்று அழைக்காமல் "மாரா" (கசப்பு) என்று அழையுங்கள் என்றாள். "சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பை கட்டளையிட்டார்." ரூத்தை தவிர, நகோமி வெறுங்கையுடன் திரும்பி வந்தாள்.





மோவாபில் உள்ள ஜனங்களைப் போல ரூத்தும் விக்கிரக வணக்கத்திலே ஈடுபட்டிருந்தாலும், அவள் இப்போது இஸ்ரவேலின் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்க திரும்பியுள்ளாள். நகோமி தேவையான அளவு சாப்பிடவேண்டுமென ரூத் கடினமாக உழைத்தாள். ஒவ்வொரு நாளும் அறுவடை செய்கிறவர்களைப் பின்சென்று, மீதமுள்ள கதிர்களைப் பொறுக்கிக்கொண்டு வந்தாள்.







போவாஸ் வயலின் சொந்தக்காரன். ரூத் தன்னுடைய மாமியாருக்கு எவ்வளவு நல்லவளாய் இருந்தாள் என்று கேள்விப்பட்டான். அவன் அவளை சந்தித்த போது, அவளுக்கு உதவி செய்யும்படி அவனுடைய அறுவடைகாரருக்கு கட்டளையிட்டுச் சொன்னது அவள் பொறுக்கிக்கொள்ள கதிர்களை சிதறும்படி விடுங்கள் என்றான். போவாஸ் ரூத்தை விரும்பத்தொடங்கினான்.



போவாசின் இரக்கத்தைப் பற்றி நகோமியிடம் சொன்னபோது, முதிர்வயதான அவள் தேவனை துதித்தாள். "அந்த மனிதன் நமக்கு நெருங்கின உறவின் முறையானும், ஆதரிக்க சுதந்திரவாளியும்" என்றாள்.



நாட்கள் சென்றபின், போவாஸ் ரூத்தை திருமணம் செய்து நகோமியையும், அவளுடைய நிலத்தையும் கவனித்துக்கொள்ள நினைத்தான். ஆனால் இன்னொரு நெருங்கிய உறவின் முறையான் இருந்தான்.







அவனுக்கு முதல் வாய்ப்பிருந்தது, அவனுக்கு நகோமியின் நிலத்தை எடுக்க ஆசை ஆனால், ரூத்தை மனைவியாக ஏற்றுக்கொள்ள இஷ்டப்படவில்லை. ஆனால் சட்டமோ ஒன்றை விட்டு மற்றதை ஏற்க அனுமதிக்கவில்லை.

அந்த நாட்களிலே, ஜனங்கள் ஒப்பந்தம் செய்வதற்கு கை குலுக்கவில்லை. போவாஸ் தன்னுடைய காலணியை கழற்றி, வெளிப்படையாக அடுத்த மனிதனிடத்தில் கொடுத்தான். பரிமாற்றம் நிறைவுசெய்யப்பட்டது.

ரூத் அவனுடைய மனைவியாக முடியும்.



இப்போது நகோமியும், ரூத்தும் போவாசுடைய குடும்பத்தின் அங்கத்தினரானார்கள்.



போவாசும்,
ரூத்தும் தங்களுடைய
முதற்பிள்ளையை ஓபேத்
என்று அழைத்தார்கள்,
அவன் இஸ்ரவேலின்
மிகப்பெரிய ராஜாவாகிய
தாவீதின் தாத்தா.

ஆனால் மிகவும் ஆச்சரியம் என்னவென்றால், குழந்தை இயேசு கிறிஸ்துவுக்கு முன் சந்ததியாயிருந்தான். இயேசு தாவீதின் சந்ததியில் வந்து இந்த உலகத்தின் இராஜாதி இராஜாவாகவும், உலகத்தின் இரட்சகராகவும் பிறந்தார்.



# ரூத்: ஒரு அன்பின் கதை

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ரூத்

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

# முற்றும்

16 60

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16